

திண்டுக்கல் மாவட்டம், வடுகம்பாடி ஊராட்சியில், கலைஞரின் கனவு இல்லம் திட்டப் பயனாளிகளுக்கு பணி ஆணைகளை அமைச்சர் சக்கரபாணி நேற்று முன்தினம் (10.08.2024) வழங்கினார். அருகில் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் சரவணன், குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் சீனிவாசன், ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் மணிமேகலை, ஊராட்சி மன்ற தலைவர் சேகர் உட்பட பலர் உள்ளனர்.



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருமங்கலம் தொகுதி கள்ளிக்குடி ஒன்றிய பகுதியில் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு பள்ளி சிறுவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் வழங்கிய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.

### நெல்லை கிழக்கு மாவட்டம் முழுவதும்

# 120 பொதுக்கூட்டங்கள் - தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

நெல்லை.ஆக.12-

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் பாளையங்கோட்டை மகாராஜா நகரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவை தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஞானதிரவியம்,ஆ.பிரபாகரன்,சித்திக்,

மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளரணி துணை

செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன், மாநில மீனவரணி துணை செயலாளர் எரிக்ஜூடு,மாவட்ட துணை செயலாளர்கள் நம்பி,மாஞ்சோலை மைக்கேல், ப.தமயந்தி, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.இந்தக் கூட்டத்தில் 120 பொதுக்கூட்டங்கள், தெருமுனைப் பிரச்சாரங்கள் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் ராமச்சந்திரன்,அபூபக்கர்,கணேசன், சாந்தி சுபாஷ், கனகராஜ், ஒன்றிய செயலாளர்கள் சிவனுபாண்டியன் என்ற பரணி சேகர்,முத்துப்பாண்டி என்ற பிரபு, முத்துக்கிருஷ்ணன்,சுடலைக்கண்ணு, ஆரோக்கிய எட்வின்,ராஜன்,செல்வ கருணாநிதி,போர்வெல் கணேசன், சேவியர் ராஜா,ஜோசப்பெல்சி,நகர செயலாளர்கள் கணேசன், சுப்பிரமணியன் என்ற மணிசூரியன், பேரூர் கழக செயலாளர்கள் முத்து கணேசன், சுப்பையா, மணிஷா செல்வராஜ்,மணிகண்டன்,எம்.வானுவாமலை,முருகையாபாண்டியன்,கசமுத்து, ஜான்கென்னடி,தமிழ்வாணன், சேதுராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு.

பாளை வடக்கு ஒன்றிய செயலாளராக பணியாற்றி சமீபத்தில் இயற்கை எய்திய வேலங்குளம் முருகன் அவர்கள் மறைவிற்கும்,சேரன்மகாதேவி முன்னாள் ஒன்றிய செயலாளர் ஆறுமுகம், சேரன்மகாதேவி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்தி ஆகியோரது மறைவிற்கும் இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவிப்பதோடு அவரது குடும்பத்தாருக்கு இக்கூட்டம் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள், மகளிர், முதியோர்,பள்ளி கல்லூரி பயிலும் மாணவ, மாணவியர், இளைஞர்களுக்கு நாளும் நலத்திட்டங் களை தந்து திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகிறது.கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் 3 ஆண்டு சிறப்பாக ஆட்சி நடத்தி,4 ம் ஆண்டில் வெற்றி நடை போடும் கழகத் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் பாராட்டுதலையும்,நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் சாதனைகளை விளக்கும் வகையில் பொதுக்கூட்டங்கள், தெருமுனைப் பிரச்சா ரங்கள் நடத்துவது என்றும் கீழ்க்கண்டவாறு.

ஒன்றிய பகுதிகளில் 4 கூட்டங்கள் 4×14 =56. பேரூர் 2 கூட்டங்கள் 2×14=28.

நகரங்கள் 5கூட்டங்கள் 4×3=12.

சார்பு அணிகள் 23 கூட்டங்கள் 23×1=23.

ஆக மொத்தம் 120 பொதுக்கூட்டங்கள்,

தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்த தீர்மானிக்கப்படு கிறது. இக்கூட்டங்களில் அந்தந்த ஒன்றிய,நகர, பேரூர் மற்றும் சார்பு அணிகளின் சார்பில் நிகழ்ச்சிகளில் மாவட்ட கழக நிர்வாகிகள்,தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கிளை, வார்டு, கழக நிர்வாகிகள், மாநில, மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பங்கேற்று திராவிட மாடல் ஆட்சியின் சாதனையை விளக்கும் 4 ம் ஆண்டு தொடக்க விழாவை இக்கூட்டம் மிக சிறப்பாகவும், மிகுந்த எழுச்சி யோடும் கொண்டாட வேண்டும் என்றும்.

கல்லூரி மாணவர்களின் கல்விக்காக பயன்பெறும் வகையில் மாதம் ரூபாய் 1000 வழங்கும் திட்டத்தினை கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 09.08.2024 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ள தமிழ்ப் புதல்வன் திட்டத்திற்கு இக்கூட்டம் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

முதலமைச்சர் கழகத் தலைவர் அன்பு தளபதியார் அவர்களுடைய உழைப்பினால் தொழில்துறையில் முதன்மை, பொருளாதார ரீதியாக அதிவேக முன்னேற்றம்,கல்வியில் இந்தியாவில் முதன்மை என தமிழ்நாட்டின் முன்னேற்றம் இருந்து வருகிறது.தமிழ்நாட்டில் வளர்ச்சியே மக்களின் வளர்ச்சி, தமிழ்நாட்டின் வளர்ச்சியும், மக்களின் வளர்ச்சியுமே தனது குறிக்கோளாக கொண்டு உழைத்து வருகின்ற நம் தலைவர் தளபதியார் அவர்கள்,உழைப்பால் தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறார்கள். தலைவர் அவர்கள் இரவு, பகல் பாராது கண் துஞ்சாத உழைப்பினால் தமிழக மக்கள் அனைவரும் முதலமைச்சர் அவர்களை எண்ணி பாராட்டி, புகழ்ந்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டின் நிறைவேற்றப்படுகின்ற மக்கள் நலத்திட்டங்களை பார்த்து மற்ற மாநிலங்களும் தங்கள் மாநிலங்களில் அந்த திட்டங்களை நிறைவேற்றுவதற்காக முயன்று வருகிறார்கள். இதுபோன்று மாநிலங்களுக்கு எல்லாம் உதாரணமாக தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகின்ற முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

தலைமைக் கழகத்தால் அமைக்கப்பட்டி ருக்கும் ஒருங்கிணைப்பு குழுவில் இடம் பெற்றுள்ள நமது கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி,முதன்மை செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் ஏ.வ.வேலு,அமைச்சர் தங்கம் தென்னரசு,இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களுக்கு இக்கூட்டம் பாராட்டுக்களையும்,வாழ்த்துக்களையும் தெரிவித்து அவர்கள் பணி சிறக்க இக்கூட்டம் வாழ்த்தி மகிழ்கின்றது.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் நம் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து கழக நிர்வாகிகள் மற்றும் பாகமுகவர்கள் ஆகியோர்கள் மத்தியில் எடுத்துக் கூறுகின்ற வகையில் ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள் கூட்டத்தை நடத்த இக்கூட்டம் ஒன்றிய, நகர,பேரூர், கழக செயலாளர்களை கேட்டுக் கொள்கிறது.

முதலமைச்சர் அவருடைய திராவிட மாடல் ஆட்சியில் வேளாண்துறை வளர்ச்சி, வேளாண்மைக்கு 2 லட்சம் பேருக்கு இலவச மின்சார இணைப்பு, விவசாய கடன் தள்ளுபடி, பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு திட்டம், கல்லூரி மாணவியருக்கு உதவித்தொகை ரூபாய் 1000 ம் அதுபோன்று மகளிர் உரிமைத்தொகை ரூபாய் 1000 வழங்குவதோடு மட்டுமல்லாமல் பொதுமக்களுக்கு அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி, போக்குவரத்துக்கு ஏற்ற சாலை வசதிகள், தரமான சுகாதார வசதி, மிகச்சிறந்த மருத்துவமனைகள், திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு, பள்ளி கல்வித்துறையில் வளர்ச்சி மற்றும் அனைத்து வழித்தடங்களுக்கும் போக்குவரத்து வசதிகள்,படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என பல்வேறு திட்டங்கள் கிடைத்து வருகிறது.இதன் காரணமாக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக உள்ளனர். மேலும்திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்து தரப்பு மக்களுக்கும் வாழ்வாதாரத்துக்கு தேவையான அடிப்படை வசதிகளான தரமான தார்சாலை வசதி, தெரு விளக்கு வசதி, குடிநீர் வசதி,மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து தந்து திருநெல்வேலி மாவட்ட மக்களின் நலனை பாதுகாத்து வருகின்ற திராவிட மாடல் ஆட்சி நடத்திவரும் முதலமைச்சர் கழகத் தலைவர் அன்பு தளபதியார் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொழில்துறையில் தமிழ்நாட்டை முதலிடம் ஆக்கி அதன் மூலம் தமிழ்நாட்டில் முதலீட்டை கொண்டு வருவதற்காக தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையில் வெற்றிகரமாக நடத்தியும் அதன் பின்பு வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு தொழில் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி முதலீட்டை ஈர்த்து வரும் முத்தமிழ் அறிஞரால் உழைப்பிற்கு பாராட்டு பெற்ற நம் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களை இக்கூட்டம் வாழ்த்தி, வணங்கி,போற்றி பாராட்டுகிறது.

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் சாதனைகளால் கழகம் தொடர் வெற்றி பெற்று வருகின்றது. அதன் தொடர்ச்சியாக விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் பல்லாயிரக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் மாபெரும் வெற்றி பெற்றது.கழக தலைவர் அவர்களுக்கும், இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் அவர்களுடன் தேர்தல் பணியாற்றிய தேர்தல் பணி குழுவினருக்கும் மற்றும் பணியாற்றிய கழகத்தினர்களை இக்கூட்டம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறுதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.



தேனி தெற்கு மாவட்டம் கம்பம் ஒன்றியம் க. புதுப்பட்டி பேரூர் கழகத்தின் சார்பாக மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படி கம்பம் ஒன்றிய செயலாளர் தங்கப்பாண்டியன் தலைமையில் பேரூர் கழகச் செயலாளர் எம் டி எம் பார்த்திபன் முன்னிலையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்வில் பேரூர் ஆட்சி மன்ற தலைவர் சுந்தரி பாஸ்கரன் . கே.எம்.பி.எல் ரவி. மற்றும் கழக முன்னோடிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

### சென்னை புறநகர் ரயில்களில் ஏ.சி. கோச்;

# பெரம்பூரில் நான்காவது ரயில் முனையம்!

## டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்விக்கு ரயில்வே அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஆக. 12-

சென்னையில் ரயில் சேவையை மேம்படுத்த ரயில்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் சென்னையில் நான்காவது ரயில் முனையம் அமைக்கவும் திட்டமிருக்கிறதா? என மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.



இதற்கு மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அளித்த பதில்:

இந்திய ரயில்வே துறையைப் பொறுத்தவரை சென்னை மிக முக்கியமான ஒரு மாநகரம். புதிய ரயில் பாதைகள் அமைப்பது, இரட்டை ரயில் பாதைகள் அமைப்பது, ரயில் நிலையங்களின் தரத்தை உயர்த்துவது, ரயில்வே மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப் பாதைகள் அமைப்பது, புதிய ரயில் பெட்டிகள் அறிமுகம் மற்றும் புதிய ரயில்கள் அறிமுகம் என சென்னையை மையமாக வைத்து தொடர்ச்சியாக பல திட்டங்களை ரயில்வே துறை செயல்படுத்தி வருகிறது.

சென்னையில் சென்டிரல், எழும்பூர், தாம்பரம் ஆகிய மூன்று ரயில் முனையங்கள் செயல்பட்டு வருகின்றன. பயணிகள் எண்ணிக்கை மற்றும் ரயில்களின் எண்ணிக்கையை மனதில்கொண்டு நான்காவதாக பெரம்பூரில் புதிதாக ஒரு ரயில் முனையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறு ஆய்வு நடந்து வருகிறது.

ஏப்ரல் 2024 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாட்டிலும், தமிழ்நாடு வழியாகவும் 33,467 கோடி ரூபாய் செலவில் 2,587 கிலோ மீட்டர் தூரத்துக்கு ரயில்வே திட்டப் பணிகள் நடந்து வருகின்றன. இவற்றில் பத்து புதிய ரயில் பாதைகள், மீட்டர் ரயில் பாதையை அகல ரயில் பாதையாக மாற்றும் மூன்று திட்டங்கள், ஒன்பது இடங்களில் இரட்டை ரயில் பாதைகள் அமைக்கும் திட்டங்கள் ஆகியவையும் அடங்கும். மொத்தம் திட்டமிடப்பட்ட 2,587 கி.மீ. திட்டத்தில் இதுவரை 7,153 கோடி ரூபாய் செலவில் 665 கி.மீ. நீளத்துக்கான பணிகள் முழுமை யடைந்துள்ளன.

2009-14 ல் தமிழ்நாட்டுக்கு 879 கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீடு, 2024 - 25ல் 6362 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. பல மடங்கு நிதி ஒதுக்கீடு அதிகமாகியும் பல ரயில்வே திட்டங்கள் தாமதமாவதற்கு நிலங்களை கையகப்படுத்துவதில் ஏற்படும் நடைமுறை மற்றும் சட்ட சிக்கல்கள்தான் காரணம்.

தமிழ்நாட்டில் பல முக்கியமான திட்டங்களுக்கு 27,749 ஹெக்டேர் நிலம் தேவைப்படுகிறது. ஆனால் இதுவரை 807 ஹெக்டேர் நிலம் மட்டுமே கையகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பணியை விரைந்து முடிக்க தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

அம்ரித் பாரத் ரயில் நிலையங்கள் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் சென்னை சென்டிரல், எழும்பூர், தாம்பரம் உட்பட 77 ரயில் நிலையங்க ளின் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதன்படி இந்த ரயில் நிலையங்களில் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும். காத்திருப்பு அறைகள், தொழில் சார்ந்த கூட்ட அரங்குகள், இலவச வைஃபை வசதி, சில்லறை விற்பனைக் கடைகள், ரயில் நிலையங்களின் மேற்பகுதியில் வணிக வளாகங்கள் ஆகியவை உள்ளூர் மக்களின் ரசனை மற்றும் பண்பாடு சார்ந்து அமைக்கப்படும்.

சாலைகளில் பயணிக்கும் பயணிகள் பாதுகாப்பு மற்றும் எளிதான ரயில் பயணத்தை உறுதி செய்யும் வகையில் கடந்த பத்தாண்டுகளில் 687 ரயில்வே லெவல் கிராசிங்குகளில் ரயில்வே மேம்பாலம் மற்றும் சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை உள்ளிட்ட தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் மேலும் 239 இடங்களில் ரயில்வே மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

புதிய ரயில்களை அறிமுகம் செய்வது என்பது ஒரு தொடர்ச்சியான பணி. பயணிகளின் எண்ணிக்கை, ரயில் நிலையங்களில் ரயில்கள் மற்றும் பயணிகளை கையாளும் இட வசதி ஆகியவற்றைப் பொறுத்து புதிய ரயில்கள் அறிமுகம் செய்யப்படுகின்றன.

தற்போது சென்னை சென்டிரல் ரயில் நிலையத்தில் உள்ள 12 நடைமேடைகள் மூலம் தினசரி 158 ரயில்களும், எழும்பூரில் 11 நடைமேஎடைகள் மூலம் 108 ரயில்களும், தாம்பரத்தில் 9 நடைமேடைகள் மூலம் 93 ரயில்களும் இயக்கப்படுகின்றன.

இவ்வாறு அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பதிலளித்தார்.

டாக்டர் கனிமொழியின் மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், 'ஆண்டுக்கு 56,716 ரயில் பெட்டிகள் தயாராகிறது. இவற்றில் 19,391 பெட்டிகள் குளிர்சாதன வசதி கொண்டவை. மும்பையைத் தொடர்ந்து சென்னை புறநகர் ரயில்களிலும் குளிர்சாதன வசதி கொண்ட ரயில் பெட்டிகள் படிப்படியாக அறிமுகம் செய்யப்படும்' என்று தெரிவித்தார்.

# துங்கபத்ரா அணை மதகில் உடைப்பு!

பெங்களூர், ஆக.12-

விஜயநகரா மாவட்டத்தில் ஹோசபேட் அருகே அமைந்துள்ள அணையின் 19ஆம் எண் கதவு உடைந்துள்ளது. அதன் வழியே அணையிலிருந்து தண்ணீர் வெளியேறி வருகிறது. சனிக்கிழமை இரவு 11 மணியளவில் 19வது கதவின் சங்கிலி இணைப்பு உடைந்துள்ளது.

இதைத் தொடர்ந்து, அணையிலிருந்து விநாடிக்கு 1 லட்சம் கன அடி வீதம் தண்ணீர் வெளியேறுவதால் ஆற்றங்கரையோரம் உள்ள பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. ஆற்றில் நீர் வரத்து எப்போது வேண்டுமானாலும் விநாடிக்கு 3 லட்சம் கன அடியை எட்டும் என்று அஞ்சப்படுகிறது. இதன் காரணமாக, கரையோர மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, கோப்பல், விஜயநகரா, பெல்லாரி, ராய்ச்சூர் மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அணையின் பாதுகாப்பு கருதி அணையின் 33 மதகுகளும் திறக்கப்பட்டு அவற்றின் வழியாக தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. உடைந்துள்ள கதவினை சரிசெய்யும் பணிகளில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகவும், அதிகளவு தண்ணீர் வெளியேறுவதால் பணியில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நெல்லை மாவட்டத்திற்கு உலகெங்கும் வாழும் தமிழ் உறவுகளை புதுப்பிக்கும் "வேர்களை தேடிதிட்டத்தின் கீழ் அயலகத்தில் வாழும் தமிழர்கள் நெல்லை டவுனில் உள்ள கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்கள் மணி மண்டபத்திற்கு வருகை தந்தனர். அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் கிருஷ்ணமூர்த்தி,மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான், கிறிஸ்துவ தேவாலயங்கள் பணி புரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய தலைவர் விஜிலா சத்யானந்த், ஆகியோர் வரவேற்றனர். நிகழ்வில் தமிழ் வளர்ச்சி துறை துணை இயக்குனர் சுந்தர், வருவாய் கோட்டாட்சியர் கண்ணா கருப்பையா, எழுத்தாளர் நாறும்பூநாதன், மத்திய மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன்,மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனிதா உள்பட பலர் கலந்து கொண்டனர்.